முழுப் பதிப்புரிமையுடைது / සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022 (2023)
## தரம் : 10

சுட்டெண்.................................

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - I**
ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - I

நேரம்: 1 மணித்தியாலம்

* சகல வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

* இலக்கம் 1 முதல் 40 வரையிலான வினாக்களுக்கு 1, 2, 3, 4 என வழங்கப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் இலக்கத்தினை தெரிவு செய்து அதற்குரிய கூட்டில் (X) அடையாளமிடுக.

---

01. இலாப நோக்குடைய வணிகங்களில் பொதுவாகக் காணக் கூடிய வணிக நோக்கமொன்றாக அமைவது,
   1. பொருட்கள், சேவைகளின் தரத்தினை உயர்த்துதல்
   2. நுகர்வோர் திருப்தியினை அதிகரித்தல்
   3. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்
   4. ஊழியர் நலன்புரிச் சேவைகள்

02. மனிதன் உயிர்வாழ்வதற்கு கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டியவை தேவைகள் எனப்படும். தேவைகளின் பண்பொன்றாக அமைவது,
   1. வரையறுக்கப்படாதிருத்தல்
   2. பல்வகைப்பட்டவை
   3. வரையறுக்கப்பட்டிருத்தல்
   4. பரவலானதாகக் காணப்படல்

03. பின்வரும் அட்டவணையில் x நிரலில் உற்பததி வளங்களும் y நிரலில் அவற்றுக்கான உதாரணங்களும் காட்டப்பட்டுள்ளன.

| x | y |
|---|---|
| 1. நிலம் | A. கட்டடம் மோட்டார் வாகனம் |
| 2. உழைப்பு | B. கனியவளங்கள், காட்டு வளங்கள் |
| 3. மூலதனம் | C. இடர்களை ஏற்றல், புத்தாக்கம் புரிதல் |
| 4. முயற்சியாண்மை | D. கணக்காளர், முகாமையாளர் |

x நிரலிலுள்ள வளங்களை y நிரலுடன் சரியாகப் பொருத்தும் போது வரும் விடை எது?

1.. 1D, 2C, 3B, 4A  2. 1A, 2C, 3D, 4B  3. 1C, 2B, 3A, 4D  4. 1B, 2D, 3A, 4C

04. வணிகமொன்றிற்கு வளங்களை வழங்கும் நபர்,
   1. வழங்குநராவர்  2. உரிமையாளராவர்  3. வாடிக்கையாளராவர்  4. முகாமையாளராவர்

05. வணிகக் கருமங்களை நிறைவேற்றுகின்ற நபர்கள் ஊழியர்களாவர். ஊழியர்களின் நோக்கமாக அமைவது,
   1. போட்டிக்கு முகம் கொடுத்தல்
   2. முதலீடு தொடர்பில் தீர்மானமெடுத்தல்
   3. போதுமானளவு இலாப மீட்டல்
   4. தொழில் பாதுகாப்பு

06. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் x நிரலில் வணிகம் தொடர்பில் அக்கறை காட்டும் பிரிவினரும், y நிரலில் அவர்களின் நோக்கங்களும் காட்டப்பட்டுள்ளன.

| x | y |
|---|---|
| 1. பொதுமக்கள் | A. வேலை வாய்ப்புக்களை வழங்கல் |
| 2. அரசு | B. தொழில் விருத்தியும், திருப்தியும் |
| 3. முகாமையாளர் | C. கடன் வழங்கலும் அதனை அறவிடலும் |
| 4. நிதி நிறுவனங்கள் | D. சமுக நலன்புரி |

x நிரலிலுள்ள தரப்பினரை y நிரலுடன் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடை.

1.. 1D, 2A, 3B, 4C  2. 1D, 2C, 3A, 4B  3. 1B, 2A, 3C, 4D  4. 1B, 2C, 3D, 4A

07. வணிகச் சூழலை பிரதானமாக இரு வகைகளாக வகைப்படுத்த முடியும். அவற்றுள் புறச் சூழல் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை யாது?

1. போட்டியாளர், உரிமையாளர்
2. வழங்குநர், ஊழியர்கள்
3. போட்டியாளர், வாடிக்கையாளர்
4. முகாமையாளர், வழங்குனர்

08. குறித்த நாடொன்றில் அரசானது உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்திக்காக வருடாந்த வரவ செலவுத்திட்டத்தில் நிதியினை ஒதுக்குவது எவ்வணிகச் சூழல் காரணிக்குரியது?

1. அரசியல் சூழல்
2. சட்டச் சூழல்
3. பொருளாதார சூழல்
4. பூகோள சூழல்

09. தொழில்நுட்பச் சூழலின் மிக விரைவான விருத்திக்கு காரணமாயமைகின்ற மிச் சிறந்த காரணி எது,?

1. நனோ தொழிநுட்பமும், டிஜிடல் தொழிநுட்பமும்.
2. நவீன கண்டுபிடிப்புக்களும், புத்தாக்கங்களும்
3. வணிகக் கருமங்களும், தனிநபரின் வாழ்க்கைப் போக்கும்
4. கணிணி தொழிநுட்பமும், இணையமும்.

10. வருமானப்பரம்பலை மிகச் சரியாக வரைவிலக்கணப்படுத்தும் கூற்று எது?

1. வேலையில் ஈடுபடுவதினூடாகக் கிடைக்கும் வருமானம்
2. குறித்த சம்பளத்திற்காகப் பெற்றுக் கொள்ளக் கூடிய பொருட்களும் சேவைகளும்.
3. பணவீக்கத்திற்கும், வட்டி வீதத்திற்குமிடையிலன தொடர்பு
4. நாடொன்றின் தேசிய வருமானமானது அந்நாட்டு மக்களிடையே பகிர்வு செய்யப்பட்டுள்ள முறை.

11. தடைகளை விதித்தமை காரணமாகவே உலகில் மசகு எண்ணெய் விநியோகம் குறைவடைவதற்கு காரணமாகும். மசகு எண்ணெய்யின் விலை உயர்வடைதல் எச்சூழல் காரணிக்குரியது?

1. பொருளாதாரச் சூழல்
2. அரசியல் சூழல்
3. பூகோளச் சூழல்
4. சட்டச் சூழல்

12. வணிகங்களின் அகச் சூழலைக் கற்கும் போது அறிந்து கொள்ளக் கூடிய வணிகத்திற்கு சாதகமான காரணிகள் (1) .............................................. எனப்படுவதுடன், பாதகமான காரணிகள் (2) .................................. எனப்படும்.

மேலே தரபட்பட்ட கூற்றில் (1), (2) வெற்றிடங்களுக்குப் பொருத்தமாகவும் முறையாகவும் அமைந்துள்ள விடையினைத் தெரிவு செய்க.

1. பலம், அச்சுறுத்தல்
2. வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்
3. வாய்ப்புக்கள், பலவீனம்
4. பலம், பலவீனம்

13. பங்குடமையொன்றின் தொடக்க மூலதனம் ரூபா 1000 வை விட அதிகமாயின் அதனை பங்காளர்களின் எழுத்து மூல ஒப்பந்தத்துடன் ஆரம்பித்தல் வேண்டும் எனக் கூறுகின்ற சட்டம்,

1. 1890 பங்குடமைக் கட்டளைச் சட்டமாகும்.
2. 1918 ம் 06ம் இலக்க வணிகப் பெயர்க்கட்டளைச் சட்டமாகும்.
3. 1840 ம் 07ம் இலக்க மோசடி தவிர்ப்புச் சட்டமாகும்.
4. 2007ம் 07ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழாகும்

14. பூரணமாக அரச அனுசரணையுடன் செயற்படுகின்ற வணிக அமைப்பாக அமைவது,

1. அரச திணைக்களங்களாகும்
2. அரச கம்பனிகளாகும்
3. அரச கூட்டுத்தாபனங்களாகும்
4. கூட்டுறவுச் சங்கங்களாகும்.

15. தனியுரிமை வணிகமொன்று அதன் பெயரினைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பத்தினைந சமர்ப்பிக்க வேண்டியது, அத்தனியுரிமை வணிகம் ஆரம்பிக்கப்பட்டு

1. 07 நாட்களினுள் ஆகும்
2. 14 நாட்களினுள் ஆகும்.
3. 25 நாட்களினுள் ஆகும்.
4. 30 நாட்களினுள் ஆகும்.

16. பின்வரும் கணிணி மென்பொருள் பொதிகளில் கணக்கீட்டுமென்பொருள் பொதியொன்றாகக் குறிப்பிட முடியாதது,

1. Saga
2. MYOB
3. MS Word
4. Acc Pack

17. வணிக நிறுவனமொன்றின் நடைமுறைச் சொத்துக்களை மாத்திரம் காட்டுகின்ற விடையினைத் தெரிவு செய்க.
    1. தளபாடம், கடன்பட்டோர், வங்கி மீதி
    2. சரக்கிருப்பு, காசு, கடன்பட்டோர்
    3. காசு, வங்கி மீதி, வங்கிக்கடன்
    4. கடன் கொடுநர், வங்கி மீதி, சரக்கிருப்பு

18. உரிமையாளரால் இடப்படுகின்ற மேலதிக மூலதனம் காரணமாக உரிமையாண்மையில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. இது தவிர உரிமையாண்மையில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்ற இன்னொரு அதிகரிப்பானது,
    1. எடுப்பனவு எனப்படும்
    2. செலவினங்கள் எனப்படும்
    3. வருமானம் எனப்படும்
    4. சொத்துக்கள் எனப்படும்.

19. உரிமையாளர் தனது சொந்தப்பணத்தினூடாக கடன் கொடுநரின் கடனைத் தீர்ப்பாராயின், இதன் மூலம்,
    1. சொத்தும் பொறுப்பும் குறைவடையும்
    2. உரிமையாண்மையும், சொத்தும் குறைவடையும்.
    3. உரிமையாண்மை அதிகரித்து உரிமையாண்மை குறைவடையும்.
    4. உரிமையாண்மை அதிகரித்து பொறுப்பு குறைவடையும்.

20. சமித் வணிகத்தின் 2022. 01. 01 இல் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு காணப்பட்டது.

    சொத்து = உரிமையாண்மை + பொறுப்பு
    500,000 = 350,000 + 150,000

    வங்கிக்கடன் வட்டி ரூபா. 18,000 காசாக செலுத்தப்பட்ட பின்னர் சரியான கணக்கீட்டுச் சமன்பாட்டைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
    1. 518,000 = 368,000 + 150,000
    2. 482,000 = 350,000 + 132,000
    3. 482,000 = 332,000 + 150,000
    4. 500,000 = 368,000 + 132,000

21. கடந்தகால கொடுக்கல் வாங்கலொன்றின் பெறுபேறாக ஏற்பட்டதும், வணிகத்தினால் செலுத்த வேண்டிய தொகை,
    1. பொறுப்பு
    2. சொத்து
    3. உரிமையாண்மை
    4. செலவு ஆகும்

22. உரிமையாளர் மேலதிக மூலதனத்தை ஈடுபடுத்தாத நிலையில் உரிமையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு அழைக்கப்படுவது,
    1. எடுப்பனவு
    2. வருமானம்
    3. செலவு
    4. சொத்து

23. குமுதினி என்பவர் திருவிழாவொன்றிற்காக ரூபா. 300,000 பணத்தினையும், ரூபா. 200,000 வங்கிக்கடனையும் பயன்படுத்தி புதிய வணிகமொன்றை ஆரம்பித்தார். இக்கொடுக்கல் வாங்கல்களை சரியாக காட்டக் கூடிய கணக்கீட்டுச் சமன்பாடு எது?

| | சொத்து (ரூபா) | = | உரிமையாண்மை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 500,000 | = | 200,000 | + | 300,000 |
| 2. | 500,000 | = | 300,000 | + | 200,000 |
| 3. | 300,000 | = | 300,000 | + | ...... |
| 4. | 200,000 | = | ...... | + | 200,000 |

24. தரகுக்கட்டண வருமானம் கிடைக்கப்பெறல் தாக்கத்தை ஏற்படுத்துவது,
    1. சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் ஆகும்.
    2. சொத்துக்களிலும் செலவுகளிலுமாகும்.
    3. செலவுகளிலும், பொறுப்புக்களிலுமாகும்.
    4. சொத்துக்களிலும், உரிமையாண்மையிலுமாகும்.

25. ஆடை விற்பனையகமொன்றில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A. சுதர்சனிக்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்த ஆடைகள் ரூபா. 20,000
   B. சுதர்சனியிடமிருந்து கிடைத்த காசு ரூபா. 15000
   C. அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்ட தொகை ரூபா. 5000

   மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூல ஆவணங்களை முறையாகக் காட்டும் விடை எது,?
   1. விற்பனை நாட்குறிப்பேடு, காசேடு, பொது நாட்குறிப்பேடு
   2. பட்டியல், கைச்சாத்து, பற்றுச் சீட்டு
   3. விற்பனை நாட்குறிப்பேடு, காசேடு, காசேடு
   4. பட்டியல், பற்றுச் சீட்டு, நாட்குறிப்புக் கைச்சாத்து.

26. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுள் பொதுநாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கல் எது?
   1. விற்பனைக்கான பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்தல்.
   2. ரூ. 40,000 பெறுமதியான இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல்.
   3. வணிகத்தின் சரக்குகளை கடனுக்கு விற்பனை செய்தல்.
   4. வணிகத்தின் பாவனைக்காக இயந்திரமொன்றை கடனுக்கு கொள்வனவு செய்தல்.

27. சிராஜ் தனது வங்கி நடைமுறை கணக்கிற்கு ரூ. 15,000 வங்கி மேலதிக பற்று வசதிக்கான அனுமதியைப் பெற்றுள்ளார். வங்கி சிராஜின் காப்புறுதி தவணைக் கட்டணமாக ரூ. 100,000 ஐ செலுத்தியது. அச்சந்தர்ப்பத்தில வங்கி நடைமுறைக்கணக்கின் சாதகமான மீதி ரூ. 6000 ஆகக் காணப்பட்டது. சிராஜ் வங்கியிலிருந்து பெற்ற வங்கி மேலதிகப் பற்றின் பெறுமதி யாது?
   1. ரூ. 15000      2. ரூ. 10000      3. ரூ. 6000      4. ரூ. 9000

- பின்வரும் தகவல்களின் உதவியுடன் 28, 29ம் வினாக்களுக்கு விடையளிக்கவும்.
  சந்திரா வணிகத்தின் 2021.08.31 ல் வங்கி நடைமுறைக் கணக்கு மீதி ரூ. 44,000 ஆகும். அத்திகதியில் வங்கிக் கூற்று மீதியுடன் இவ்வங்கி மீதி இணங்கவில்லை. அவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு,
  A. வங்கிக்கு முன்வைக்கப்பட்டாத காசோலைகள் ரூ. 5000
  B. வங்கிக் கட்டணம் ரூ. 2000
  C. நேரடி வைப்பு ரூ. 8000
  D. வழங்கப்பட்டு வங்கியினால் மறுக்கப்பட்ட காசோலைகள் ரூ. 9000

28. சீராக்கப்பட்ட காசேட்டின் படி மீதியாக அமைவது,
   1. ரூ. 42,000 ஆகும்      2. ரூ. 50,000 ஆகும்.      3. ரூ. 59,000 ஆகும்.      4. ரூ. 52,000 ஆகும்.

29. வங்கிக் கூற்றின்படி மீதியாக அமைவது,
   1. ரூ. 64,000      2. ரூ. 48,000      3. ரூ. 57,000      4. ரூ. 46,000

30. வணிகமொன்றின் தளபாடத் தேய்வுக்கணக்கு ஒரு (1) .................... காணக்காகும். கொள்வனவுக் கணக்கு ஒரு (2) .................. கணக்காகும். வெற்றிடத்திற்கு பொருத்தமான விடை,
   1. சொத்து, செலவு      2. செலவு, வருமானம்
   3. செலவு, உரிமையாண்மை      4. சொத்து. உரிமையாண்மை

31. ஆடை வணிகமொன்றை நடாத்திச் செல்லும் கருணா, ஹரிஸ் வணிகத்திடமிருந்து ரூபா. 100,000 விற்கு ஆடை வகைகளைக் கொள்வனவு செய்தார். கொள்வனவின் போது 10% கழிவு வழங்கப்பட்டதுடன், ஒரு மாதத்தின் பின்னர் கருணாபணத்தைச் செலுத்திய போது 15% காசுக் கழிவு வழங்கப்பட்டது. கருணா வணிகத்தின் இக் கொடுக்கல் வாங்கலைப் பதிவு செய்கின்ற முறையினைத் தருக.
   1. கொடுத்த கழிவு கணக்கு வரவு ரூ. 13,500 காசுக் கணக்கு வரவு ரூ. 76,500 கருணா கணக்கு செலவு ரூ. 90,000
   2. ஹரிஸ் வணிகக் கணக்கு வரவு ரூ. 90,000 பெற்ற கழிவுக் கணக்கு செலவு ரூ. 13500 காசுக் கணக்கு செலவு ரூ. 76,500
   3. காசுக் கணக்கு வரவு ரூ. 90,000 பெற்ற கழிவுக் கண்க்கு செலவு ரூ. 13,500 கருணா கணக்கு செலவு ரூ. 76,500
   4. ஹரிஸ் கணக்கு வரவு ரூ. 90,000 கருணா கணக்கு செலவு ரூ. 90,000

- குறித்த வங்கியொன்றின் 2022 செப்டம்பர் மாதத்தில் காசாக செலுத்திய சில்லறைச் செலவுகள் ரூபா 13,350 ஆகும். 2022 செப்டம்பர் 01 இல் சில்லறைக்காசு மீதி ரூ. 300 ஆக காணப்பட்டதுடன் 2022 செப்டம்பர் 30 இல் சில்லறைக் காசு மீதி ரூ. 1650 ஆகக் காணப்பட்டது.
மேலே தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 32ம் 33ம் வினாக்களுக்கு விடையளிக்க.

32. இவ்வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி யாது?
1. ரூ. 13,300 2. ரூ. 15,000 3. ரூ. 13,650 4. ரூ. 15,300

33. இவ்வணிகத்தின் 2022 ஒக்டோபரில் மீள் நிரப்ப வேண்டிய வசக்கட்டின் பெறுமதி யாது?
1. ரூ. 13,300 2. ரூ. 12,000 3. ரூ. 13,650 4. ரூ. 13,050

34. கயான் வணிகத்தின் ஆகஸ்ட் மாதத்திற்காகத் தயாரித்த கொள்வனவு நாடகுறிப்பேடு கீழே தரப்பட்டுள்ளது.

கொள்வனவு நாட்குறிப்பேடு

| திகதி | பட்டியல் இல | கொள்வனவாளர் | பெறுமதி | பேரேட்டுப் பக்கம் |
|---|---|---|---|---|
| 8.25 | 131 | நளினி | 75,000 | |
| A | | B | 75,000 | |

A,B எழுத்துக்களுள்ள இடங்களில் காட்டப்படவேண்டிய விடயத்தைச சரியாகவும், முறையாகவும் காட்டும் விடை எது?
1. 8.31, கொள்வனவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.
2. 8.31, கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்படடது.
3. 8.25, கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
4. 8.25, கொள்வனவுக் கணக்கில் செலவு வைக்கப்ட்டது,

35. விற்பனை நாட்குறிப்பேட்டின் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தத்தைப் பேரேட்டிற்கு மாற்றும் போது,
1. குறித்த கடன் கொடுநர் கணக்குகளில் வரவு வைக்கப்படும்
2. குறித்த கடன் கொடுநர் கணக்குகளில் செலவு வைக்கப்படும்.
3. குறித்த கடன்படுநர் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.
4. குறித்த கடன்படுநர் கணக்குளில் செலவு வைக்கப்படும்.

36. 2022.09.10 ல் ஹமீத் தனது வணிகத்தின் பாவனைக்காக ரூபா 200,000 பெறுமதியான அலுமாரியொன்றை வரையறுக்கப்பட்ட றணசிங்க கம்பனியிடமிருந்து கடனுக்கு கொள்வனவு செய்தார். இதனை பதிவு செய்வதற்குரிய மூல ஆவணம் மூல ஏடு என்பவற்றை முறையாகக் காட்டும் விடை எது?
1. பொது நாட்குறிப்பேடு, நாட்குறிப்புக் கைச்சாத்து
2. கொள்வனவு நாட்குறிப்பேடு, கொள்வனவுப் பட்டியல்
3. நாட்குறிப்புக் கைச்சாத்து, பொது நாட்குறிப்பேடு
4. கொள்வனவுப் பட்டியல், கொள்வனவு நாட்குறிப்பேடு

37. பின்வரும் வழுக்களில் பரீட்சை மீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் வழு எது?
1. விற்பனைப்பட்டியலின் பெறுமதி ரூபா 19,000 கணக்குகளில் ரூபா 69,000 எனவும் பதிவு செய்யப்பட்டிருந்தது.
2. கொள்வனவுப்பட்டியல் ரூபா 15,000 முழுமையாக கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை
3. கட்டட வாடகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 25,000 கட்டடக் கணக்கில் மாத்திரம் வரவு வைக்கப்பட்டிருந்தது.
4. கடன் கொடுநருக்குச் செலுத்திய ரூபா 12,000 காசுக்கணக்கில், வரவிலும் கடன் கொடுநர் கணக்கில் செலவிலும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

38. பரீட்சை மீதி என்பது,
1. மூல ஆவணமொன்றாகும். 2. பேரேட்டுக் கணக்கொன்றாகும்
3. மீதிகளை உள்ளடக்கிய பட்டியலொன்றாகும். 4. முதன்மை ஏடொன்றாகும்.

♦ 39ம் 40ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைத் துணையாகக் கொள்க.

டில்சான் வணிகத்தின் 2021.12.31 ல் தயாரித்த பரீட்சை மீதியின் வரவுப்பக்கம் ரூ. 72,200 ஐயும் செலவுப்பக்கம் ரூ. 74,200 ஐயும் காட்டியது. இவ்வேறுபாட்டுக்கான காரணங்கள் பின்வருமாறு,

- வணிகம் செலுத்திய மின்சாரக் கட்டணமான ரூ. 12,000 ஆனது கணக்குகளில் ரூ. 1200 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
- செலுத்திய காப்புறுதி கட்டணம் ரூ. 8,000 காப்புறுதிக் கணக்கில் ரூபா 6 000 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

39. மேலே தரப்பட்ட பரீட்சை மீதியின் வரவு செலவு பக்க மீதிகளின் வித்தியாசத்தை தொங்கல் கணக்கில் பதிவு செய்ய வேண்டிய முறை,
    1. ரூபா. 2,000 வை செலவு மீதியாக பதிவு செய்ய வேண்டும்.
    2. ரூபா. 2,000 வை வரவு மீதியாக பதிவு செய்ய வேண்டும்.
    3. ரூபா 74,200 ஐ வரவு மீதியாக பதிவு செய்ய வேண்டும்.
    4. ரூபா 74,200 ஐ செலவு மீதியாக பதிவு செய்ய வேண்டும்.

40. மேலே தரப்பட்ட வழு 01 இனைத் திருத்துவதற்குரிய சரியான பொது நாட்குறிப்புப் பதிவு எது?
    1. மின்சாரக் கட்டணக் கணக்கு வரவு - ரூ. 1200
       காசுக் கணக்கு செலவு - ரூ. 1200
    2. தொங்கல் கணக்கு வரவு - ரூ. 1200
       மின்சாரக் கட்டணக் கணக்கு செலவு - ரூ. 1200
    3. மின்சாரக் கட்டணக் கணக்கு வரவு - ரூ. 10,800
       காசுக் கணக்கு செலவு - ரூ. 10,800
    4. தொங்கல் கணக்கு வரவு - ரூ. 10,800
       மின்சாரக் கட்டணக் கணக்கு செலவு - ரூ. 10,800

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

முழுப் பதிப்புரிமையுடைது / සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022 (2023)
## தரம் : 10

சுட்டெண்.........................................

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - II**
ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - II

நேரம்: 2 மணித்தியாலம்

**கவனிக்கவும் :-**

முதலாம் வினாவுக்கும் பகுதி - I ல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி - II ல் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. பின்வரும் நிகழ்வின் உதவியுடன் வினா இலக்கம் 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.

தேசிய பயிலுநர் மற்றும் தொழில்கள் பயிற்சி அதிகார சபையில் தையல் தொடர்பில் பாடநெறியொன்றைக் கற்றுள்ள சானியா, தந்தையிடமிருந்து கிடைத்த ரூபா 200,000 பணத்தையும், ரூபா 25,000 பெறுமதியான தையல் இயந்திரங்கள் இரண்டையும் பயன்படுத்தி 2022.01.01 ம் திகதி பெண்களுக்கான ஆடைகளை தைத்து விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தார். ஒரு உதவியாளரின் உதவியுடன் நகரத்திலுள்ள பாடசாலைக்கு அருகில் வாடகைக்குப் பெற்ற கட்டடமொன்றில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வணிகத்திற்கு ‘சானியா ஆடையகம்’ எனவும் பெயரிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது,

இவ்வணிகத்தில் ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

01.01 ரூபா 75,000 வங்கியிலிட்டு நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது.
01.02 மூலப்பொருட்கள் கொள்வனவு ரூபா. 25,000
01.04. உபகரணங்கள் காசுக்கு கொள்வனவு ரூபா 10,000
01.15. விற்பனை மூலம் கிடைத்த காசு ரூபா 35,000
01.20. கடனுக்கு கொள்வனவு செய்த மூலப் பொருட்கள் ரூபா 15,000
01.22 மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 4500
01.25 ஊழியர் சம்பளத்திற்காக ரூபா 20,000 காசோலையொன்று வழங்கப்பட்டது.
01.28 விற்பனை மூலம் கிடைத்த காசு ரூபா 25,000
01.29 கட்டட வாடகை செலுத்தியது ரூபா 15,000
01.30 வங்கியில் வைப்பிலிட்ட காசு ரூபா 75,000

2022.02.01 இல் சானியா ரூபா 200,000 வை வங்கியிலிருந்து கடனாகப் பெற்றார்

1. அ) சானியா ஆடையுற்பத்தி வணிகம் நிறைவு செய்கின்ற தேவை யாது?
   ஆ) சானியா உற்பத்தி வணிகத்தில் காணப்படுகின்ற உற்பத்திக் காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு அதற்கான உதாரணம் தலா ஒன்று தருக.
2. அ) இந்நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற பலமொன்றையும் வாய்ப்பொன்றையும் தருக.
   ஆ) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்சார் பயிற்சி அதிகார சபை எவ்வணிக அமைப்பு வகைக்கு உட்பட்டது.?
3. அ) சானியா ஆடையுற்பத்தி வணிகத்தைப்பதிவு செய்யய வேண்டுமா?
   ஆ) உமது விடைக்கான காரணத்தைத்தருக.
4. இங்கு அகச் சூழலுடன் தொடர்புடையதாக கூறப்படுகின்ற இரு விடயங்களைத் தருக.
5. அ) இவ்வணிகத்தின் சொத்து குறைவடைதல், சொத்து அதிகரித்தல் எனும் இரட்டை தாக்கத்தைக் காட்டக்கூடிய கொடுக்கல் வாங்கலொன்றை தருக.
   ஆ) இவ் வணிகத்தின் ஆரம்பக்கணக்கீட்டுச் சமன்பாட்டை தொகைகளுடன் எழுதிக் காட்டுக.

6. அ) 01.20 இல் சானியா ஆடையுற்பத்தி வணிகத்தின் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்குரிய மூல ஆவணத்தையும் மூல ஏட்டையும் தருக.
   ஆ) 01.20 இல் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டைப் பதிவினைத் தருக.
7. 01.31 இல் சானியா ஆடையுற்பத்தி வணிகத்தின் கொள்வனவுக் கணக்கினைத் தருக.
8. அ) 02.01 இல் பெற்ற வங்கிக்கடனுக்குரிய இரட்டைப் பதிவினை எழுதிக் காட்டுக.
   ஆ) அதனை உரிய கணக்குகளில் பதிவு செய்து காட்டுக.
9. அ) 01.25 இல் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டைப்பதிவினைத் தருக.
   ஆ) அதனைக் கணக்குகளில் பதிவு செய்து காட்டுக.
10. சானியா உற்பத்தி வணிகத்தின் 2022.01.31 இல் காணப்பட்ட காசு மீதியினைக் கணிக்க.

(2 x 10 = 20 புள்ளிகள்)

## பகுதி I - வணிகக்கல்வி

♦ **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக**

02. 1) அ) பண்டமாற்று முறை எனப்படுகின்ற பாட்டர் முறை (Barter system) என்றால் என்ன? விளக்குக. (01 புள்ளி)
   ஆ) வணிகம் என்றால் என்ன? (01 புள்ளி)
2) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.
   அ) பிறந்ததிலிருந்து இறக்கும் வரை மனிதனுக்கு பொருட்கள் சேவைகள் தேவைப்படுகின்றன.
   ஆ) வணிகம் என்பது பொருளாதாரக் கருமமல்ல
   இ) அரச துறையிலுள்ள பெரும்பாலான வணிகங்களின் அடிப்படை நோக்கம் இலாப முழைப்பதாகும்.
   ஈ) தற்காலத்தில் தனக்குத் தேவையான சகலதையும் எவரும் தானே உற்பத்தி செய்து கொள்வதில்லை.

(4 x ½ = 2 புள்ளிகள்)

3) 'அரச துறை மற்றும் தனியார் துறை சார்ந்த வணிகங்களை இன்று எங்கும் காணக்கூடியதாக உள்ளது. இவை தமது வணிகக்கருமங்களை இலாபத்தை நோக்காகக் கொண்டே நடாத்திச் செல்கின்றன' இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீரா? காரணத்தைத் தருக.

(2 புள்ளிகள்)

4) சிந்துஜா கையியக்க முறையினைப் பயன்படுத்தி பிரதேசத்தினுள் மேற்கொண்டு வந்த விளம்பரக் கலையினை கணினி மற்றும் நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி உலக சந்தைக்கு இலத்தரனியல் ஊடகத்தினூடாக முன்வைத்து விற்பனை செய்து வருகின்றார்.
   அ) சிந்துஜா வணிகமானது உற்பத்திப் பொருட்களின் தன்மைக் கேற்ப எவ்வகை வணிகத்தை சேர்ந்தது,
   ஆ) இவ்வணிகம் இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்துவதினூடாக பெற்றுக் கொள்ளக் கூடிய இரண்டு அனுகூலங்களைத் தருக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

03. 1) அ) வணிகச் சூழல் என்றால் என்ன?
   ஆ) வணிகச் சூழலை பிரதானமான இருவகைகளாக வகைப்படுத்திக் காட்டுக. (2 புள்ளிகள்)
2) பின்வரும் கூற்றுக்களில் 'உண்மை' அல்லது 'பொய்' என்பதைக் குறிப்பிடுக.
   அ) வணிகச் சூழல் காரணிகள் மிக விரைவாக மாற்றமடைவதில்லை
   ஆ) வணிகமொன்றின் நீண்டகால ஸ்திரத்தன்மையானது வாடிக்கையாளரிலேயே தங்கியுள்ளது.
   இ) சில வணிகங்களின் உரிமையாளர்களே முகாமையாளர்கள் ஆவார்
   ஈ) வழங்குநர்கள் அகச் சூழலுக்குரிய காரணியொன்றாகும். (2 புள்ளிகள்)

3) அ) வணிகமொன்றின் பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்வோர் வாடிக்கையாளராவர். இவர்களுக்காக வணிகமொன்று எவ்வாறு செயற்படல் வேண்டும்?

ஆ) தொழிநுட்ப மாற்றங்களின் காரணமாக வணிகங்களில் இடம்பெற்றுள்ள மாற்றங்களுக்கு இரு உதாரணங்களைத் தருக.

4) நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியினைக் காரணமாக வைத்து வியாபாரிகள் பொருட்களில் விலைகளில் தனக்கு விருப்பமானவாறு மாற்றங்களை செய்தும் பல்வேறு வியாபார முறைகேடுகளில் ஈடுபட்டும், வாடிக்கையாளர்களை பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

அ) மேலே குறிப்பிட்ட விடயத்திற்கேற்ப நுகர்வோர் பாதுகாப்பிற்காக முறைப்பாடுகளை செய்யக் கூடிய நிறுவனம் யாது?

ஆ) மேலே குறிப்பிட்ட சம்பவத்திற்கேற்ப நுகர்வோர் பாதுகாப்பிற்காக அமுல்படுத்தப்படுகின்ற சட்டம் யாது? (2 புள்ளிகள்)

04\. 1) அமலன் காயத்ரியிடமிருந்து தனது வீட்டுப் பாவனைக்காக காய்கறிகளை கொள்வனவு செய்திருந்ததுடன், காயத்ரி அக்காய்கறிகளை ஜெயந்தியிடமிருந்து கொள்வனவு செய்திருந்தார்.

அ) மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்படுகின்ற நுகர்வோரினதும், சில்லறை வியாபாரியினதும் பெயர்களைத் தருக.

ஆ) ஜெயந்தி தனது காய்கறிகளை விற்பனை செய்யகடகூடிய முறையினைக் காட்டக் கூடிய வேறுபட்ட இரு பாய்ச்சல் கோட்டு வரைபடங்களைத் தருக. (2 புள்ளிகள்)

2) பின்வரும் கூற்றுக்கள் ‘உண்மை’ அல்லது ‘பொய்’ என்பதைக் குறிப்பிடுக.

அ) விற்பனை விலையானது குறைவாகக் காணப்படல் சில்லறை வியாபாரத்தின் பண்பொன்றாகும்.

ஆ) வீட்டுக்கு வீடு சென்று விற்பனை செய்வதை சில்லறை வியாபாரமாகக் குறிப்பிடலாம்.

இ) பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் படி பங்குடமை வணிகத்தின் ஆகக் குறைந்த பங்காளர எண்ணிக்கை இரண்டு ஆகும்.

ஈ) தனியுரிமை வணிகமொன்றைப் பதிவு செய்வதினூடாக அதற்கு சட்ட ஆளுமை கிடைக்கப்பெறுகின்றது.

3) பினவரும் வணிகங்கள் எவ்வகை வணிக அமைப்பிற்கு உட்பட்டது என்பதைக் குறிப்பிடுக.

அ) இலங்கைத் துறைமுக அதிகார சபை

ஆ) அமீன் ஸ்டோர்ஸ்

இ) குவின்டஸ் மற்றும் அவர் பிள்ளைகள்

ஈ) வரையறுக்கப்பட்ட குணவர்தன கம்பனி (4 x ½ = 2 புள்ளிகள்)

4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் கிடைக்கக் கூடிய அனுகூலமொன்றையும் பிரதகூலமொன்றையும் தருக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

## பகுதி II – கணக்கீடு

♦ இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

05\. 1) கணக்கீடு என்றால் என்ன என்பதை குறிப்பிட்டு, கணக்கீட்டின் இரண்டு நோக்கங்களைத் தருக. (2 புள்ளிகள்)

2) வணிகமொன்றில் இடம் பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலதிகமாக நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. அந்நிகழ்வுகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக. (2 புள்ளிகள்)

3) கீழே தரப்பட்டுள்ள கணக்குகளில் அதிகரிப்பு அல்லது குறைவு பதிவு செய்யப்படுகின்ற முறையினைத் தருக.

| கணக்குகள் | அதிகரிப்பு | குறைவு |
|---|---|---|
| அ) கொள்வனவுக் கணக்கு | | |
| ஆ) உபகரணக் கணக்கு | | |
| இ) மூலதனக் கணக்கு | | |
| ஈ) மின் கட்டணக் கணக்கு | | |

4) அமிலன் என்பவரினால் 2022.01.01 இல் ஆரம்பிக்கப்பட்ட வணிகத்தில் முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அ) ஆரம்ப மூலதனமாக இட்ட தொகை ரூ. 70,000

ஆ) பெற்ற வங்கிக் கடன் ரூ. 50,000

இ) அனிலிடமிருந்து கடனுக்கு சரக்குகள் கொள்வனவு ரூ. 10,000

ஈ) காசாக செலுத்திய வாடகை ரூ. 15,000

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் காட்டுக.

**கொடுக்கல் வாங்கல் இலக்கம் சொத்து = உரிமையாண்மை + பொறுப்புக்கள்**

அ) ..........................................................................................................................

ஆ) ..........................................................................................................................

இ) ..........................................................................................................................

ஈ) ..........................................................................................................................

(4 x ½ = 2 புள்ளிகள்)

5) வணிகமொன்று பின்வரும் பேரேட்டுக் கணக்குகளைப் பேணிச் செல்கின்றது.

அ) கடன்பட்டோர் கணக்கு

ஆ) காப்புறுதிக் கட்டணக் கணக்கு

இ) வங்கிக் கடன் கணக்கு

ஈ) தையல் இயந்திரக் கணக்கு

உ) பற்றுக் கணக்கு

ஊ) கடன் கொடுனர் கணக்கு

எ) சம்பளக் கணக்கு

ஏ) மூலதனக் கணக்கு

மேலே தரப்பட்ட கணக்குகளை பின்வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

அ) சொத்துக் கணக்கு ஆ) பொறுப்புக் கணக்கு இ) செலவுக் கணக்கு

ஈ) உரிமையாண்மைக் கணக்கு (4 x1 = 4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

06. 1) அ) காசுக் கணக்கு என்றால் என்ன?

ஆ) காசுக் கணக்கில் வரவில் பதிவு செய்யக் கூடிய மற்றும் செலவில் பதிவு செய்யக் கூடிய தலா ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களைத் தருக. (2 புள்ளி)

2) அ) 2022.07.01 இல் சந்திரா வணிகத்தின் காசு மீதி ரூ. 91,000 ஆகும்.

- 2022.07.03 இல் வங்கியிலிருந்து பெற்ற கடன் ரூ. 100,000 ஆகும்.
- 2022.07.04 கடன் கொடுத்தோனான பியலுக்கு செலுத்திய காசு ரூ. 48,000
- வணிகத்தின் காப்புறுதிக் கட்டணம் ரூ. 25,000
- 2022.07.06 இல் காசு விற்பனை ரூ. 50,000

1. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை சந்திரா வணிகத்தின் காசேட்டில் பதிவு செய்து காட்டுக.
2. காசேட்டினை சமப்படுத்தி காசு மீதியினைக் காண்க. (4 புள்ளிகள்)

3) தாரிக் வணிகத்திற்கு கரீம் எனும் கடன்பட்டோனிடமிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 150,000 பெறுமதியான காசோலையானது குறித்த திகதியிலேயே வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. அக்கோசோலையானது வங்கியினால் மறுக்கப்பட்டதாக வங்கி தாரிக்கிற்கு அறிவித்துள்ளது. இவ்வமறுக்கப்பட்ட காசோலையை தாரிக் வணித்தில் பதிவு செய்வதற்குரிய இரட்டைப்பதிவினைத் தருக. (2 புள்ளிகள்)

4) ஹனிபா வணிகத்தின் சில்லறை காசு வசக்கட்டின் பெறுமதி ரூபா 2500 ஆகும். 2022 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற சில்லறைச் செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | கைச்சாத்து இல | விபரம் | தொகை(ரூபா) |
|---|---|---|---|
| 2022.04.05 | 001 | எழுதுக்கருவிகள் கொள்வனவு | 750 |
| 2022.04.10 | 002 | அஞ்சல் செலவு | 200 |
| 2022.04.17 | 003 | அஞுசல் பதிவுக்கட்டணம் | 50 |
| 2022.04.26 | 004 | போக்குவரத்துச் செலவு | 1000 |

வேண்டப்படுவது,
மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை சில்லறைக் காசேட்டில பதிவு செய்து, 2022.04.30 இற்கு சில்லறைக் காசேட்டினை சமப்படுத்துக. (4 புள்ளிகள்)
(மொத்தம் 12 புள்ளிகள்)

07. 1) பொது நாட்குறிப்பேடு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2) பின்வரும் பேரேட்டு மீதிகளை பரீட்சை மீதியில் பதிவு செய்யும் போது. அவை எப்பக்கத்தில் (வரவிலா, செலவிலா?) பரீட்சை மீதியில் பதிவு செய்யப்படும் என்பதைத் தருக.
அ) கொள்வனவு ரூ. 100,000
ஆ) மூலதனம் ரூ. 700,000
இ) காசு ரூ. 180,000
ஈ) மின்சாரக் கட்டணம் ரூ. 15,000 (2 புள்ளிகள்)

3) 2022.01.31 இல் நதீஷா வணிகத்தின் வங்கிக்கணக்கில் அனுகூலமான மீதி ரூபா 40,000 ஆகும். எனினும், அம்மாதத்திற்கு வங்கியினால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றின் மீதியானது வேறோர் மீதியைக் காட்டியது. பின்னர் அவ்வேறுபாட்டிற்கான பின்வரும் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- வங்கிக்கு நேரடியாகக் கிடைக்கப் பெற்ற பங்குலாபம் ரூபா 5000
- வங்கிக்கு நேரடியாகக் கிடைக்கப் பெற்ற கடன்பட்டோரின் நேரடி வைப்பு ரூ. 4000
- நதீஷாவின் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்பட்ட எனினும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 3000 காசோலையும் (கா.இல 255213) மற்றும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டும் இன்னும் தீர்வையாகாத ரூபா 14000 காசோலையும் (கா.இல 03321) காணப்பட்டது.

***வேண்டப்படுவது,***
1. வங்கிக் கணக்கைச் சீராக்குதல்
2. வங்கி இணக்கக் கூற்றைத் தயாரித்தல் (4 புள்ளிகள்)

4) கார்த்திக் வணிகத்தின் 2022.03.31 இல் பரீட்சை மீதியின் வரவுப் பக்க மீதியின் மொத்தம் ரூபா 178,000 ஆகவும், செலவு மீதியின் மொத்தம் ரூபா 188,000 ஆகவும் காணப்பட்டது. அதற்கான காரணங்கள் பின்வருமாறு
அ) நிறுவன வாடகை ரூபா 2000 காசேட்டிலும், வாடகை கணக்கிலும் செலவு வைக்கப்பட்டது.
ஆ) கடன்பட்டோர் தந்த காசு ரூபா 6000 கடன்பட்டோர் கணக்கில் இருமுறை பதிவு செய்யப்பட்டிருந்தது.
இ) உபகரணங்களின் திருத்தத்திற்காகச் செலவு செய்த ரூபா 3000 உபகரணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

***வேண்டப்படுவது:***
அ) வழுக்களைத் திருத்து முறையினைக் காட்டும் தொங்கல் கணக்கு
ஆ) மேலே தரப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்குரிய நாட்குறிப்புப் பதிவுகள் (4 புள்ளிகள்)
(மொத்தம் 12 புள்ளிகள்)

PAST PAPERS WIKI



WWW.PastPapers.WIKI
Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

| வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் - மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 | |
|---|---|
| தரம் : 10 | பாடம்: வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය |
| **விடைகள்** | |

## பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) 4 | 6) 1 | 11) 1 | 16) 3 | 21) 1 | 26) 4 | 31) 2 | 36) 3 |
| 2) 3 | 7) 3 | 12) 4 | 17) 2 | 22) 2 | 27) | 32) 2 | 37) 3 |
| 3) 4 | 8) 1 | 13) 3 | 18) 3 | 23) 2 | 28) 2 | 33) 1 | 38) 3 |
| 4) 1 | 9) 1 | 14) 1 | 19) 4 | 24) 4 | 29) 2 | 34) 2 | 39) 2 |
| 5) 4 | 10) 4 | 15) 2 | 20) 3 | 25) 4 | 30) 1 | 35) 3 | 40) 3 |

(1x40= 40 புள்ளிகள்)

## பகுதி II

1. 1) அ) உடை ஆ) உழைப்பு - உரிமையாளர், உதவியாளர்
மூலதனம் :- தையல் இயந்திரங்கள்

2) அ) பலம் - தையல் இயந்திரப் பாடநெறியைப் பின்பற்றியுள்ளமை
பாடசாலைக்கு அண்மையில் இருத்தல்
ஆ) அரச துறை:-

3) பதிவு செய்யத் தேவையில்லை., சொந்தப் பெயரில் நடாத்தப்படுவனால்

4) உதவியாளர், உரிமையாளர்

5) அ) வங்கயில் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்தல் (ரூபா 75 000 இட்டு)
ஆ) சொத்து = மூலதனம் + பொறுப்பு
225 000 = 25000 + 200 000

6) அ) பட்டியல், கொள்வனவு வாட்குறிப்பேடு
ஆ) கொள்வனவு'க் கணக்கு வரவு ரூபா 15 000
கடன் கொடுநர் கணக்கு செலவு ரூபா 15 000

7) கொள்வனவுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 25 000 | மீ.செ. | 40 000 |
| கடன் | 15 000 | | |
| | 40 000 | | 40 000 |

8) அ) காசுக் கணக்கு வரவு ரூபா 200 000
வங்கிக் கடன் கணக்கு செலவு ரூபா 200 000 (1 புள்ளி)
*ஆ) உரிய கணக்குகளில் பதிவு செய்து காட்டியிருந்தல் 1 புள்ளி*

*9) அ) சம்பளக் கணக்கு வரவு ரூபா 20 000*
*வங்கிக் கணக்கு செலவு ரூபா 20 000*

*10)*

காசுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 200 000 | வங்கி | 75 000 |
| விற்பனை | 35 000 | கொள்வனவு | 25 000 |
| விற்பனை | 25 000 | உபகரணம் | 10 000 |
| | | மின்சாம் | 4 500 |
| | | வாடகை | 15 000 |
| | | வங்கி | 75 000 |
| | | மீ.செ. | 55 500 |
| | 260 000 | | 260 000 |

## வணிகக் கல்வி

2. 1) அ) பண்டங்களைக் கொடுத்து பண்டங்களைப் பரிமாற்றிக் கொள்ளல் (1 புள்ளி)
ஆ) வணிகத்திற்கான சரியான விளக்கம் (1 புள்ளி)
2) அ) உண்மை ஆ) பொய் 3) பொய் 4) உண்மை ( 2 புள்ளி)
3) இல்லை
காரணம்:- தனியார்துறை சார்ந்த வணிகங்கள் இலாபத்தை நோக்காக் கொண்டு செயற்படுவதுடன், அரசதுறை வணிகங்கள் இலாபத்தை நோக்காகக் கொண்டு செயற்படுவதுடன், அரச துறை வணிகங்களின் பெரும்பாலானவை சேவை நோக்கம் கருதியே செயற்படுகின்றன.
4) அ) சேவை உற்பத்தி வணிகம் (1 புள்ளி)
ஆ) பொருத்தமான இரு நன்மைகளுக்கு 1 புள்ளி
(மொ. 08 புள்ளி)

3. 1) அ) வணிகத்தை நடாத்திச செல்கின்ற போது அதில் தாக்கத்தை மேற்படுத்தக் கூடிய பல்வேறு காரணிகள் செயற்பாடும் சூழல் (1 புள்ளி)
ஆ) அகச் சூழல், புறச் சூழல் (1 புள்ளி)
2) அ) பொய், ஆ) உண்மை இ) உண்மை ஈ) பொய் (2 புள்ளி)
3) அ) அவர்களின் தேவை, விருப்பங்களை இனம் கண்டு அவற்றை பூர்த்தி செய்தல். அவர்களில் ஏற்படுகின்ற சுவை மாற்றங் இனம்கண்டு அவற்றை திருப்திசெய்தல் (1 புள்ளி)
4) அ) நுகர்வோர் அலுவலகள் அதிகார சபை
ஆ) 2003ம் ஆண்டு 9ம் இலக்க நுகவர்வோர் அதிகாரக் கூட்டுத்தாபனம் (2 புள்ளி)
(மொத்தம் 8 புள்ளி)

4. 1) அ) நுகர்வோன்:- அமலன் சில்லறை வியாபாரி (2 புள்ளி)
ஆ) ஜெயந்தி - அமலன்
ஜெயந்தி காயத்ரி - அமலன் (2 புள்ளி)
2) அ) பொய் ஆ) உண்மை இ) உண்மை ஈ) பொய் (2 புள்ளி)
3) அ) அசுர ஆ) தனியுரிமை இ) பங்குடமை ஈ) தனிக் கம்பனி (2 புள்ளி)
4) பொருத்தமான ஒரு அனுகூலம், பிரதிகூலத்திற்கு (2 புள்ளி)
(மொத்தம் 8 புள்ளி)

## கணக்கீடு

5. 1) கணக்கீடு என்பதற்கான சரியாயன விளக்கம் (1 புள்ளி)
அதன் இரண்டு நோக்கங்களுக்க (1 புள்ளி)
2) • ரூ. 20 000 மாத சம்பளத்தில் ஊழியரொருவர் நியமிக்கப்பட்டார்
• தீயினால் பொருட்கள் அழிவுற்றல்
• முகாமையாளர் விலக்கப்படல் (2 புள்ளி)
3)

| | அதிகரிப்பு | குறைவு |
|---|---|---|
| அ) கொள்வனவு கணக்கு | வரவு | செலவு |
| ஆ) உபகரணக் கணக்கு | வரவு | செலவு |
| இ) மூலதனக் கணக்கு | செலவு | வரவு |
| ஈ) மின்கட்டணக் கணக்கு | வரவு | செலவு |

(2 புள்ளி)

4)

| கொ.வாங்கல் | + சொத்து | | = உரிமையாண்மை | + பொறுப்பு |
|---|---|---|---|---|
| அ) | + 70 000 | = | 70 000 | |
| ஆ) | + 50 000 | = | --- | + 50 000 |
| இ) | + 10 000 | = | --- | + 10 000 |
| ஈ) | - 15 000 | = | - 15 000 | |

(4 புள்ளி)

5) சொத்துக் கணக்கு :- கடன்பட்டோர், தையல் இயந்திரம்
பொறுப்புக் கணக்கு :- வங்கிக் கடன், கடன் கொடுநர்
செலவுக் கணக்கு :- காப்புறுதிக் கட்டணம், சம்பளம்
உரிமையாண்மை :- மூலதனக் கணக்கு, பற்றுக் கணக்கு

(2 புள்ளி)

6. 1) *அ) காசு வரவுகளையும், செலவுகளையும் பதிவு செய்யும் ஏடு* *(1 புள்ளி)*
*ஆ) வரவில் - காசு விற்பனை, பெற்ற தரகு*
*செலவில் - கொ. சம்பளம், விளம்பரச் செலவு* *(1 புள்ளி)*

2)

காசுக் கணக்கு

| திகதி | விபரம் | பே. ப. | தொகை | திகதி | விபரம் | பே. ப. | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 22.07.01 | மீதி | | 91 000 | 22.07.04 | பியல் | | 48 000 |
| 03 | வங்கிக் கடன் | | 100 000 | | காப்புறுதி | | 25 000 |
| 06 | விற்பனை | | 50 000 | | மீ.செ. | | 168 000 |
| | | | 241 0000 | | | | 241 000 |
| | | | 168 0000 | | | | |

(4 புள்ளி)

3) *கரீம் (கடன்பட்டோன்) கணக்கு வரவு ரூபா 150 000*
*வங்கிக் கணக்கு செலவு ரூபா 150 000* *(2 புள்ளி)*

4) *சில்லறைக் காசேட்டின் அமைப்பிற்கு* *(1 புள்ளி)*
*உரிய பதிவுகள் (சரியான)* *(1 புள்ளி)*
*சில்லறைக்காசேட்டினை சமப்படுத்தி மீ.கீ.கொ. செ.* *(1 புள்ளி)*
*தலைப்பிற்கு (½ புள்ளி)*
*பகுப்பாய்வு நிரல் கணக்கு கூட்டுதல்* *(½ புள்ளி)*

7. 1) *பொருத்தமான விளக்கம்* *- 2 புள்ளி*
2) *கொள்வனவு வரவு மூலதனம் செலவு*
*காசு வரவு மின்சாரம் வரவு* *(2 புள்ளி)*

3)

சீராக்கிய வங்கிக் கணக்கு

| விபரம் | வங்கி | விபரம் | வங்கி |
|---|---|---|---|
| மீதி | 40 000 | மீ.செ | 49 000 |
| பங்கிலாபம் | 5 000 | | |
| நே. வைப்பு | 4 000 | | |
| | 49 000 | | 49 000 |
| மீ.வ. | 49 000 | | |

4)

வங்கி இணக்கக்கூற்று

| | |
|---|---|
| காசேட்டை திருத்திய பின் மீதி | 49 000 |
| கூட்டுக. சமர்ப்பிக்கப்படாத காசோலை | 3 000 |
| கழிக்க | 52 000 |
| தீர்வையாகாத காலேைகள் | (14 000) |
| வங்கிக் கூற்றின் படி மீதி | 38 000 |

தொங்கல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 10 000 | வாடகை | 4 000 |
| | | க.பட் | 6 000 |
| | 10 000 | | 10 000 |

பொது நாட்குறிப்பேடு

| | | |
|---|---|---|
| வாடகைக் கணக்கு வரவு<br>தொங்கல் கணக்கு செலவு<br>(வாடகை க.கில் செலவு வைக்கப்பட்ட தொகை) | 4 000 | 4 000 |
| க.பட்டோர் கணக்கு வரவு<br>தொங்கல் கணக்கு செலவு<br>(க.ப.ட்டோருக்கு செலுத்திய 6000க்கு ) | 6 0000 | 6 000 |
| உபகரண திருத்தம் வரவு<br>உபணக் கணக்கு செலவு<br>(திருத்தச் செலவு தவறுதலாக பதியப்பட்டது) | 3 0000 | 3 000 |

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!